# TNPSC GROUP II MAIN EXAM
# MANDATORY TEST V
## கட்டாய தமிழ் தகுதித் தேர்வு

**Total Marks: 100** **Time : 3 hrs**

**கேள்வி எண் 1** **15 மதிப்பெண்கள்**

1. **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக**

    1. திருக்குறளில் மனிதநேயம் குறித்து ஒரு கட்டுரை வரைக
    2. திருக்குறளில் அறக்கருத்துக்கள் எவ்வாறு கூறப்பட்டுள்ளது என்பது குறித்து ஒரு கட்டுரை வரைக
    3. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட திருக்குறள் தற்காலத்திற்கும் எவ்வாறு பொருந்துவதாக அமைந்துள்ளது என்பது குறித்து ஒரு கட்டுரை வரைக.
    4. திருக்குறள் ஓர் உலக பொதுமறை என போற்றப்படுவது ஏன்?
    5. தமிழ் இலக்கியத்தில் திருக்குறள் பெறும் இடம் யாது?

**கேள்வி எண் 2** **10 மதிப்பெண்கள்**

2. **பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்கு சுருக்கமாகவும், தெளிவாகவும் சரியான விடை எழுதுக**

செய்யுளைப் படைக்கும் முறை இரண்டு வகைப்படும். செய்யுளைப் பண் அமைப்போடு, படைப்பாளனே படைப்பது ஒருவகை, செய்யுளை எழுதிப் பின் வேறொருவர் பண்ணிசைப்பது மற்றொரு வகை, தேவாரம் முதல்வகையைச் சேர்ந்தது என்பர். மாணிக்கவாசகர் தேவாரங்களைப் ''பண் சுமந்த பாடல்'' என்று கூறுகிறார். எனவே, இறைவனின் அருளைச் சொற்களாக்கி இசைப்படுத்தியவர்கள் திருஞானசம்பந்தர். திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் எனலாம்.

பாணர், பாடினி ஆகியோர் வாய்ப்பாட்டிலும் இசைக்கருவிகளை இசைப்பதிலும் வல்லவர்களாக விளங்கினர். பாணர் என்பர், ஆண் இசைக்கலைஞர் பாடினி என்பவள், பெண் இசைக்கலைஞர் ஆவர். இவ்விசைக் கலைஞர்கள் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் என வகைப்படுத்தப்பட்டனர. துளைக்கருவி வாசிப்போர், தோல்கருவி வாசிப்போர், நரம்புக்கருவி இசைப்போர், கண்டத்தால் பாடுவோர் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளதைச் சிலப்பதிகார இந்திரவிழாவெடுத்த காதை கூறுகிறது.

இசைப்பாணர்கள் வாய்ப்பாட்டுப் பாடுவதில் வல்லவர்களாக இருந்தனர். யாழ் என்னும் இசைக் கருவிகளை மீட்டுவதில் வல்லவர்களை ''யாழ்ப்பாணர்'' என அழைத்தனர். சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய இலக்கியங்களில் யாழ்ப்பாணர் பற்றிய செய்திகள் மிகுதியாக உள்ளன. மண்டை எனப்படும் ஒட்டினைக் கையில் ஏந்திப் பாடியவர்கள், மண்டைப்பாணர் என அழைக்கப்பட்டனர்.

இசை ஆசிரியன் எனப் பலரும் மாதவி நாடக அரங்கில் ஆடும் ஆடலுக்குத் துணை யாழ் ஆசிரியன் எனப் பலரும் மாதவி நாடக அரங்கில் ஆடும் ஆடலுக்குத் துணை நின்றார்கள் எனச் சிலம்பு கூறுகிறது. இசையின் இயக்கங்களை அடிப்படையாகக் கொண்டு முதல்நடை, வாரம், கூடை திரள் என இசை வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை, மந்த நடையாகத் தாழ்ந்து செல்லும் முறையில் இசைக்கப்படுவது முதல்நடை, முடுகிச் செல்லும் விரைந்த நடை உடையது திரள். இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட இசை நடையை உடையது வாரம். சொற் செறிவும் இசைச் செறிவும் உடையது கூடை ஆகும்.

இறையனார் களவியல் உரை மூலம் முதுரை, முதுகுருகு ஆகிய நூல்கள் இருந்தன என்பதை அறியமுடிகிறது. இந்நூலின் உரைப்பாயிரம் சிற்றிசை, பேரிசை ஆகிய நூல்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. பெருநாரை, பொருங்குருகு, பஞ்சபாரதீயம், இந்திரகாளியம் முதலான நூல்களைப் பற்றி அடியார்க்கு நல்லார் கூறுகிறார். இசை நுணுக்கம் என்னும் நூல் சயந்தன் என்னும் பாணடிய இளவரசனால் இயற்றப்பட்டது என்று கூறியுள்ளனர்.

யாப்பருங்கலகாரிகை உரைப்பாயிரத்தில், குலோத்துங்கன் இசைநூல் என்ற நூலைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. இசை தொடர்பான பல நூல்களின் பெயர் கிடைத்த போதும் அறிவனார்

இயற்றிய ‘‘பஞ்சமரபு’’ என்னும் நூல் தற்போது நமக்குக் கிடைத்துள்ளது. ப. சுந்தரேசனார் என்பவர் இந்நூலை உரையோடு வெளியிட்டுள்ளார்.

1. இறைவனின் அருளைச் சொற்களாக்கி இசைபடுத்தியவர்கள் யாவர்?

2. பழங்காலத்தில் இசைக் கருவிகள் இசைக்கும் ஆண், பெண் இசைக்கலைஞர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

3. யாழ் பாணர்கள் பற்றிய செய்திகள் மிகுதியாக இடம் பெறும் பத்துப்பாட்டு நூல்கள் எவை?

4. மாதவியின் ஆடலுக்கு துணை நின்ற இசைக் கலைஞர்களாக சிலப்பதிகாரம் யாரைக் குறிப்பிடுகிறது?

5. அக்காலத்தில் இசைத் தொடர்பாக இருந்த பழந்தமிழ் நூல்கள் எவை?

**கேள்வி எண்.3** **10 மதிப்பெண்**

3. **கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை**

**தமிழர் விழாக்கள்**

விழாக்கள் என்பவை, சமுதாயத்தின் கூட்டுச் செயல்பாட்டையும் வளத்தையும் காட்டும் குறியீடுகளாகும். தமிழரின் விழாக்கள் பலவகையாகக் கொண்டாடப்படுகின்றன. இந்த விழாக்கள் பண்பாட்டு மரபுகளையும் பாரம்பரிய அடையாளங்களை விவரிக்கும் வகையில் உள்ளன.இதனால் விழாக்கள் மக்களின் அறநெறி வாழ்வுக்கு உதவுகின்றன என்பதையும் அறியலாம்.

திருவிழா என்பது மக்கள் ஒன்று கூடி கொண்டாடும் நிகழ்வாகும். திருவிழாக்கள் பல்வேறு காரணங்களுக்காகக் கொண்டாடப்பட்டாலும் மக்களிடையே ஒற்றுமையை உண்டாக்குவதே முதல் நோக்கமாகும். இவை இயற்கை சார்ந்தவை, இனம் சார்ந்தவை, சமயம் சார்ந்தவை என வகைப்படுத்தப் படுகின்றன.

மக்கள் பருவகால மாறுபாடுகளுக்கு ஏற்ப இந்த விழாக்களைக் கொண்டாடினர். இது இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கொண்டாடப்படுகிறது. ஓர் இனத்தின் அடையாளம் மற்றும் வழிபாட்டு நெறிமுறைகளுடன் கொண்டாடப்படும் விழாக்கள் இனம் சார்ந்தவை எனப்படும். நாள்தோறும் வழிபாடு நடந்தாலும் ஆண்டிற்கு ஒருமுறை சிறப்பு வழிபாடு நடைபெறும். அதுவே திருவிழா. திருவிழாக்கள் என்பவை சமுதாயத்தின் பண்பாட்டையும், மரபையும் வெளிப்படுத்துகின்றன. எனவே இவை ஒருமைப்பாட்டு உணர்வையும், வேற்றுமையில் ஒற்றுமையை வளர்க்கவும் உதவுகிறது.

திருவிழாக்கள் பொதுவாக சிறியவர் முதல் பெரியவர் வரை ஆர்வத்துடன் வரவேற்கும் நிகழ்ச்சியாகும். ஓர் இடத்தில் வாழும் மக்களின் நாகரிகம், பண்பாடு, பாரம்பரியம், உணர்வு, நம்பிக்கை போன்றவற்றை வெளிப்படுத்துவதாக அமைகிறது. மேலும் இவை மதம் சார்ந்தோ, ஏதேனும் நிகழ்ச்சிகளை நினைவு கூறவோ, இயற்கைக்கு நன்றி செலுத்தவோ கொண்டாடப்படுகின்றன.

அவ்வகையில் தமிழர்கள் கொண்டாடும் திருவிழாக்களாவன, தைத்திங்கள் பொங்கள் விழா, காணுமாட்டுப் பொங்கல், காணும் பொங்கல், தீப ஒளித் தீருநாள், கார்த்திகை தீபத் திருநாள், ஆடிப்பெருக்கு, நவராத்திரி, விஜயதசமி, ஆயத பூஜை, சரஸ்வதி பூஜை, அம்மன் திருவிழா, கடலாட்டு விழா, அழகர் திருவிழா, தேரோட்டம், போகிப் பண்டிகை, பங்குனி உத்திர விழா, ஆடிப்பூரம், தீமிதித் திருவிழா, நாட்டார் திருவிழாக்கள், கந்தரத விழாக்கள், வைகாசி விசாகம் போன்ற பல்வேறு விழாக்கள்.

தேர்த்திருவிழாக்கள் என்பவை பத்து நாட்கள் நடைபெற்று, இறுதிநாளில் நடைபெறும் திருவிழாவின் மஞ்சள் நீராட்டு விழாவிற்கு முதல்நாள் தேரோட்டம் நடைபெறும். முதன்மைத் தெய்வத்திற்கு பெரிய தேரும், பிற தெய்வங்களுக்கு சிறிய தேரும் இருக்கும். கீழை நாடுகளில் லூர்து நகர் என அழைக்கப்படும் வேளாங்கண்ணி தேர்த்திருவிழா அனைத்து சமய மக்களும் கலந்து கொள்ளும் வழாவாகும்.

நாட்டார் திருவிழாக்கள் என்பவை கிராம மக்களால் வணங்கப்படுபவை. இவை சிறுதெய்வ அல்லது கிராம தேவதைகள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவை கிராம மக்களின் பண்பாட்டுடனும், பழக்க வழக்கங்களுடனும் ஒன்றிணைந்தவை. ஆடிப்பூர வழாவானது ஆடிமாதம், பூரம் நட்சத்திர நாளில் அம்மனுக்கும், ஆண்டாளுக்கும் கொண்டாடப்படுவது. கந்தரத விழாக்கள் என்பவை தைப்பூசம், பங்குனி உத்திரம், கந்த சஷ்டி போன்ற நாட்களில் முருகனின் ஆலயத்தில் நடைபெறும் விழாவாகும்.

தைப்பொங்கல் விழா தமிழனின் பாரம்பரிய தலைசிறந்த விழாவாகும். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் விழாவகும். இவ்வாறு தமிழரின் விழாக்கள் மக்களை ஒன்றிணைத்து, இயற்கைக்கு நன்றி செலுத்தி பாரம்பரியத்தை நிலைநாட்டும் ஒரு பண்பாட்டு நிகழ்வாக இருந்து வருகிறது

**கேள்வி எண் 4:** **10 மதிப்பெண்கள்**

**4. பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)**

**சிற்பக்கலை**

சிற்பம் - தமிழர்மனஉணர்வு – கற்கவிஞர்கள் - நடுகல் - பஞ்சபாண்டவரதம் - குடைவரைகோவில்கள் - கழுகுமலை வெட்டுவான் கோவில் - சிற்பக்கலையின் கருவூலம் - செப்புத்திருமேனிகளின் பொற்காலம்.

**கேள்வி எண் 5:** **10 மதிப்பெண்கள்**

**5. பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக**

**தேவதாசி முறை**

தேவதாசி அல்லது தேவர் அடியாள் என்ற வார்த்தையின் பொருள் ‘‘கடவுளின் சேவகர்’’ என்பதாகும். பெண் குழந்தையைக் கோவிலுக்கு நேர்த்தி கடனாக அர்ப்பணிக்கும் வழக்கம் இருந்தது. அவர்கள் கோயிலைக் கவனித்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல், பரத நாட்டியம் மற்றும் பிற பாரம்பரிய இந்திய கலைகளையும் கற்றுக் கொண்டனர்.

பிற்காலங்களில் அவர்கள் மோசமாக நடத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்டனர். மேலும் வேதாசிகள் தங்கள் கண்ணியம், பெருமை உணர்வு, சுயமரியாதை மற்றும் கௌரவம் ஆகியவற்றை இழந்தனர்.

இந்தியாவின் முதல் பெண் மருந்துவரான டாக்டர் முத்துலட்சுமி அம்மையார், கொடுமையான தேவதாசி முறையை தமிழ்நாட்டிலிருந்து ஒழிப்பதற்காக தன்னை அர்பணித்துக் கொண்டார். தேவதாசி முறைக்கு எதிரான அவரது போராட்டத்தைப் பாராட்டும் வகையில் 1929 இல் அவர் சென்னை சட்டமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்டார்.

பெரியார் ஈ.வெ.ரா. ‘‘தேவதாசி ஒழிப்பு மசோதாவை’’ நிறைவேற்றுவதில் முக்கிய கருவியாக செயல்பட்டார். 1930 இல் டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் இம்மசோதாவைச் சென்னை சட்டமன்றத்தில் முன்மொழிந்தார்.

தேவதாசிகளின் விடுதலைக்காக போராடிய மற்றொரு பெண்மணி மூவலூர் ராமாமிர்தம் ஆவார். ராஜாஜி, பெரியார் மற்றும் திரு.வி.க ஆகியோரின் தொடர்ச்சியான தார்மீக ஆதரவுடன் இந்த கொடுமையான முறைக்கு எதிராக அவர் முழக்கம் எழுப்பினார். இதன் விளைவாக அரசாங்கம் ‘‘தேவதாசி ஒழிப்புச் சட்டத்தை’’ நிறைவேற்றியது.

**கேள்வி எண் 6:** **10 மதிப்பெண்கள்**

**6. பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்கவும்**

**CHANDRAYAAN -1**

Our country launched a satellite Chandrayaan -1 (meaning Moon vehicle) on 22nd October 2008 to study about the Moon. It was launched from Sthish Dhawan Space Center in Sriharikota, Ahdhra Pradesh with the help of PSLV (Polar Satellite Launch Vehicle) rocket. It was put into the lunar orbit on 8th November 2008.

The spacecraft was orbiting around the Moon at a height of 100 km from the lunar surface. It collected the chemical. The mineralogical and the geological information about the Moon. This mission was a major boost for the Indian space programs and helped to develop it own technology to explore the Moon. Chandrayaan -1 was operated for 312 days and achieved 95% of its objectives. The scientists lost their communication with the space craft on 28th August 2009. On the successful completion of all the major objectives, the mission was concluded.

**கேள்வி எண் 7:** **15 மதிப்பெண்கள்**

**அலுவலகக் கடிதம்**

அரசு முதன்மை செயலாளர் அவர்கள் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதி திட்டத்தின் கீழ் அரசு பள்ளிகளில் பயிலும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு உயர்கல்வி உதவித்திட்டம் தொடர்பாக அரசு ஆணை பிறப்பிக்கப்படும் வகையில் அறிக்கை ஒன்றை எழுதிடுக.

**கேள்வி எண் 8:** **20 மதிப்பெண்கள்**

**a. கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

1. வாழ்நாள்
2. இணையவலை
3. நுண்ணறிவு
4. வடிவமைத்து

**b. பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க**

1. குலம் - குளம்
2. தால் - தாள்
3. காலம் - காளம்
4. விலக்கு - விளக்கு

**c. பிரித்து எழுதுக**

1. பேரகராதி
2. ஐம்பெருங்குழு
3. நற்செங்கோல்
4. இன்னோசை

**d. எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக**

1. ஆமைகள் வேகமாக ஓடும்
2. பரதன் உள்ளத்தை குகன் உணர்ந்தான்
3. தேன்மொழி பாடங்களை பயின்றாள்
4. தமிழகத்தில் பெரியாரை அனைவரும் அறிவர்

**e. பிழை நீக்கி எழுதுக**

1. எண் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின.
2. ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது
3. வாழைப்பலத் தோள் வளுக்கி விழுந்தான்
4. மரத்தின் கணியைப் பரித்து உன்டான்.